**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

OS. 72/2015

நாள். 20.12.2022.

வா.சா.1 - முத்துராமலிங்கம்

**<u>4 - 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

ராஜன்பாபு, செண்பகா தேவி ஆகியோர் என் குடும்ப உறுப்பினர்கள் அல்ல. அவர்கள் வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள். சி முதல் இ தபசில் சொத்துக்களை அவர்களும் பங்குதாரர்களாக இருந்து கிரையம் பெற்றார்கள். டெல்டா இன்ஞ்சீனியரிங் என்பது தான் அந்த பங்குதாரர் நிறுவனம். எங்கள் பொது குடும்ப சொத்திலிருந்து வந்த வருமானத்தில் அந்த பங்கு நிறுவனம் தொடங்கப்பட்டது என்பதை காண்பிக்க ஆதாரம் உள்ளதா என்று கேட்டால் என் தாத்தா சொல்லி எனக்கு தெரியும். எழுத்து பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. ஆதியிலிருந்த பொதுக்குடும்ப சொத்துக்கள் A மற்றும் B தபசில் சொத்துக்கள் என்றால் சரிதான். தபசில் F தவிர B முதல் G வரையுள்ள சொத்துக்கள் அனைத்தும் தற்போது கிரையம் கொடுக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும். C முதல் G வரை சொத்துக்களை கிரையம் பெற்றவர்களை வழக்கில் சேர்க்க நான் நடவடிக்கை எடுக்கவில்லை. B தபசில் சொத்தில் 3ல் 1 பங்கு கிரையம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். முந்தைய வழக்கின் தீர்ப்பு படி B தபசில் சொத்தின் தங்களுக்குரிய 3ல் 1 பாகத்தை 4 முதல் 10 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்பதும் அது சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. முந்தை வழக்கு தீர்ப்பு படி C முதல் E தபசில் சொத்துக்களையும் மற்றும் G தபசில் சொத்தையும் 4 முதல் 7 பிரதிவாதிகள் தங்களது சுயராஜ்ஜியத சொத்துக்கள் என்ற அடிப்படையில் விற்றது செல்லும் என்றால் சரியல்ல. F தபசில் சொத்து 4 பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு வாங்கியது

என்றால் சரிதான். அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தான் உரிமை என்றால் சரியல்ல. F தபசிலில் பல லட்சங்கள் செலவு செய்து 4 முதல் 7 பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். முந்தைய வழக்கில் F தபசில் சொத்து கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உயில் உண்மையான ஆவணம் என்றால் பழைய வழக்கிலேயே அதை தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. பழைய வழக்கு 8ம் பிரதிவாதி கணவரால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு உயில் இருந்திருந்தால் 8ம் பிரதிவாதியின் கணவர் பழைய வழக்கில் சொல்லியிருப்பார் என்றால் அவருக்கு உயிலை பற்றி தெரியாது. என்னுடைய தந்தை முந்தைய வழக்கில் தாக்கல் செய்த பல மனுக்களை பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் உயில் இருந்திருந்தால் அதைப்பற்றி பழைய வழக்கில் சொல்லியிருப்பார் என்றால் அந்த வழக்கில் அவர் தோன்றாதரப்பினர் என்பதால் அதைப்பற்றி சொல்லவில்லை. நான் தாக்கல் செய்த வாசாஆ18 டெல்டா இன்ஞ்சீனியரிங் ஒர்க் பங்குதாரர்களின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அந்த சான்றிதழ் அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டது அல்ல என்பதும், நானே மேலாளர் என்று தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. முந்தைய வழக்களில் A மற்றும் B தபசில் சொத்தில் எனது தந்தைக்கு 3ல் 1 பங்கு பாகம் உள்ளது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அந்த 3ல் 1 பகுதியில் தான் நான் பாகம் கோர முடியும் என்றும், மொத்த சொத்தில் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. அதை போல் அந்த 3ல் 1 பகுதியில் தான் என் சகோதரி பாகம் கோர முடியும் என்றும், மொத்த சொத்தில் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. பழைய வழக்கில் 4ம் பிரதிவாதியின் கணவரின் சுராஜ்ஜியத சொத்துக்கள் என்று தபசில் C

முதல் E மற்றும் G சொத்துக்கள் தீர்மானிக்கப்பட்டதால் அதில் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல.

*(மேற்கூறிய குறுக்கு விசாரணையை 8-10 பிரதிவாதிகள் தத்து எடுத்துக்கொண்டார்கள்).*